காயல்பட்டினம் K.M.T.மருத்துவமனை அறங்காவலர்


அரிமா **S.S.M.சதக்கத்துல்லாஹ்** சொல்கிறார்:

(திருச்சி சையது தயாரித்து வரும் 'அன்பின் முகவரி அப்துல்ரஹ்மான்' நூலிற்காக)

# பல்லாண்டு காலம் வாழ்க!



1983 பிப்ரவரி – தமிழக வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க ஆண்டு ஆகும். ஆம்! தமிழக முதல்வரான எம்.ஜி.ஆர். அவர்கள் அ.தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளராக செல்வி ஜெயலலிதா அவர்களை அறிவித்தபின் முதன் முறையாக அரசியல் களத்தில் இறங்கியது 1983ல் நடைப்பெற்ற திருச்செந்தூர் இடைத்தேர்தலில்தான்.



இன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்களுக்கு அரசியல் அங்கீகாரத்தையும் பிற்காலத்தில் தமிழக முதல்வராகும் தகுதியையும் அந்த இடைத்தேர்தல் பெற்றுத் தந்தது.

திருச்செந்தூர் இடைத்தேர்தலில்தான் வாழும் காலத்தின் வள்ளல் சீதக்காதியைப் பார்க்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது!.

முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களோடு நெருக்கமான நட்பு கொண்டவர் பி.எஸ்.அப்துர்ரஹ்மான் வாப்பா அவர்கள். எம்.ஜி.ஆர் அவர்களும் பி.எஸ்.அப்துர்ரஹ்மான் வாப்பா மீது அளப்பரிய பாசம் கொண்டவர். அவர் ஒரு திரைப்படத்தில் "ஒன்றே சொல்வார் நன்றே செய்வார் அவரே அப்துல்ரஹ்மானாம்", எனப்பாடி தனது அன்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த நெருக்கத்தால் அந்த இடைத்தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதற்காக காயல்பட்டினத்தில் தங்கி வேலை செய்தார்கள் பி.எஸ்.அப்துர்ரஹ்மான் வாப்பா அவர்கள்.

ஜாவியா அரபிக்கல்லூரியில் ஓதிக்கொண்டிருந்தபோது எனக்கு வயது பதிமூன்று.

காயல்பட்டினத்தில் முதல் பொறியாளர் காலஞ்சென்ற ஷேக் அவர்களுடன் ஒவ்வொரு இடமாக வந்து ஆதரவு திரட்டி வந்த பி.எஸ்.அப்துர்ரஹ்மான் வாப்பா அவர்களைப் பார்த்ததில் எனக்கு இன்ப அதிர்ச்சி. நல்ல அழகான முகத்தோற்றம். அந்த அழகிற்கு மகுடம் சூட்டியது போல நீல நிறத்தொப்பி, சிரித்த முகம். அந்த நேரத்தில் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் கண்ணியமிக்க தைக்காவாப்பாவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தேன். அவர்கள் குடும்ப தொழில் நிறுவனங்களை தைக்காவாப்பா நிறுவனங்கள் என்றுதான் காயல்பட்டினத்தில் அழைப்பார்கள். தைக்காவாப்பா அவர்களை ஓரிரு முறை பார்த்திருக்கிறேன். அவர்கள் பல்லாக்கு குடும்பத்தாருக்கு சொந்தம் என்றும் தைக்காவாப்பா அவர்களும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களும் சகோதரர்கள், அதாவது தந்தை ஒன்று, தாய் வேறு என்றும் தெரிந்து கொண்டேன்.

இதற்குப் பிறகு ஒன்பது ஆண்டுகள் கழித்து 1992ல் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஐக்கிய பொருளாதாரப் பேரவையின் (United Economic Forum) பத்தாவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் ஏற்காட்டில் உள்ள ஹோட்டல் தமிழ்நாட்டில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்ற நிகழ்வில் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக கவனிக்கும் வாய்ப்பு கிடைத்தது.



1993ல் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஆண்டு!. ஐக்கிய பொருளாதாரப் பேரவையின் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்திற்கு அந்தமான் செல்ல நான்கவ்ரி (M.V.Noncowry Ship) கப்பலில் புறப்பட்டுச் சென்றோம். மூன்று நாட்கள் கடலில் பயணம். அப்போது தான் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றேன். ஐக்கிய பொருளாதாரப் பேரவையின் உறுப்பினர்களில் வயதில் சிறியவனாக நான்தான் இருந்தேன். கப்பலிலே பேரவைக் கூட்டம் நடைபெற்றது. அந்தமானைப் பார்க்கவும் அந்த மகாப்பெரியவருடன் பழகவும் இப்பயணம் பெருந்துணை புரிந்தது.

அந்தப் பயணமும் பழக்கமும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் நல்ல தொடர்பை எனக்கு ஏற்படுத்தித் தந்தது. சமூக சேவையில் நாட்டமும் அந்த சேவையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களோடு தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ள எனக்கு நல்வாய்ப்பினை நல்கியது.

இதன் ஆவலாக பல்வேறு பொதுநல அமைப்புகளில் என்னை இணைத்துக் கொண்டேன்.

2000ம் ஆண்டு அக்டோபர் மூன்றாம் தேதி சமுதாயப் பிரமுகரும் தமிழகத்தின் முதல் முஸ்லிம் ஆடிட்டருமாகிய உபைத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மரணமுற்று அன்னாரின் ஜனாசா தொழுகை அஞ்சுமன் அனாதை நிலையத்தில் அஸர் தொழுகைக்குப் பின் நடைபெற்றது. பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் வருவதற்கு முன்பே ஜனாசா தொழுகை முடிந்து ஜனாசாவும் திருவெற்றிவூர் தாங்கல் மையவாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. சற்று தாமதமாக வந்த பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களும் அவர்களின் தனிச்செயலாளர் ஹசன் அவர்களும் திருவெற்றியூர் தாங்கல் மையவாடிக்குப் புறப்பட்டார்கள். என்னையும் உடன் அழைத்தார்கள். நானும் உடன் சென்றேன். சுமார் 45 நிமிட பயண நேரத்தில் சமுதாய முன்னேற்றம், சமூக நலம் மற்றும் கல்விப் பணிகள் பற்றிய முக்கியமான பல கருத்துக்களை பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் நல்கியது எனது வாழ்கைக்குப் படிப்பினையாக அமைந்தது. அந்நேரத்தில் "நான் மௌத்தான பின் எனது ஜனாசாவை பிறைப்பள்ளி (Crescent Residential School Campus) வளாகத்தில் தான் அடக்கம் செய்ய வேண்டுமென்று தன் விருப்பத்தினை பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் தெரிவித்தார்கள்".

பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் முடித்து திரும்பும்போதெல்லாம் பிறைப்பள்ளிக்குச் சென்ற பின்னே தன் இல்லம் செல்லும் வழக்கம் உடையவராக இருந்தார்கள் என கேள்விப்பட்டுள்ளேன். எனவே வாழ்வில் மட்டுமல்ல தன் மறைவுக்குப் பின்னரும் தன் மண்ணறை வாழ்க்கை இப்பள்ளியிலே அமையட்டும் என்ற எண்ணம் இயல்பாகவே அவர்களது மனதில் பதிந்து விட்டது.

1997ம் ஆண்டு கோவையில் நடந்த போக்குவரத்துக் காவலர் ஒருவரின் அநியாய படுகொலை ஒட்டு மொத்த கோவை முஸ்லிம்களின் வாழக்கையைக் கேள்விக் குறியாக்கிவிட்டது. 19 முஸ்லிம்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட அச்சமயத்தில் பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. நெருக்கடியில் கோவை முஸ்லிம்கள் தவித்த நேரம். என்றும் பிறர் நலம் பேணும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் சுப்பாராவ் அவன்யு இல்லத்தில் தராவீஹ் தொழுகை முடிந்த பின் நடைபெற்ற ஐக்கிய பொருளாதாரப் பேரவையின் ஆலோசனைக் கூட்டத்தில் பொருளாதாரத்தை இழந்து பரிதவிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி உதவிகள் வழங்கப்படன.. அக்கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன்.

சமுதாயத்திற்கு எப்போதும் எந்நேரம் பாதிப்பு ஏற்பட்டாலும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் உள்ளம் துடிப்பதையும் ஓடோடி வந்து துயர்துடைக்க உதவிக் கரம் நீட்டுவதில் அவர்கள் முன்னிலை வகிப்பதையும் நான் பல முறை பார்த்திருக்கிறேன். அக்கூட்டத்தில் கலந்துக் கொண்ட பேராசிரியர் M.H. ஜவாஹிருல்லா அவர்கள் பூந்தமல்லி பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் போதிய வசதிகள் இல்லாமல் கல்விக்கூடம் நடத்தப்படுகிறது, அதற்கு உதவ வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்கள். சில நாட்கள் கழித்து இது பற்றி பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் நினைவூட்டும்படி பேராசிரியர் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் இது பற்றி நினைவூட்டியதும் உடன் அக்கல்விக்கூடம் சென்று ஆய்வு செய்து வரும்படி என்னைப் பணித்தார்கள். நானும் அக்கல்விக்கூடம் சென்று ஆய்வு செய்து அக்கல்விக்கூடத்தை அப்போது நிர்வகித்த அன்றைய த.மு.மு.க. பொருளாளர் நிசார் அஹமது அவர்களிடம் கலந்து விவாதித்து பெற்ற விவரங்களை பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் தெரிவித்தேன். விவரங்களை அறிந்த பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் காலதாமதமின்றி அவர்களுடைய பொதுமேலாளர் ஜலால் அவர்களை தொடர்புக் கொண்டு ஆணையிட்டதின் பெயரில் பல லட்ச ரூபாய் செலவு செய்து அவர்களின் நிறுவனத்தின் பொறியாளர்களைக் கொண்டு வகுப்பறைகள் கட்டிக் கொடுத்தார்கள். சமுதாயம் கல்வியில் உயர்வு பெற பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் எப்படி பாடுபட்டார்கள் என்பதை நேரில் கண்டு வியந்தேன்.

இச்சீரியப் பணியில் என்னைப் போன்றவர்களை இணைத்ததின் மூலம் இருபத்தெட்டு வயதாகயிருந்த எனக்கும் பொதுசேவையில் உந்துதலை ஏற்படுத்தியது என்றால் என் வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சியாக இதனைக் கருதுகிறேன்.

பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் தொண்டுள்ளத்திற்கு மட்டும் முன்னுதாரணமாகத் திகழவில்லை. தனி மனித வாழ்க்கையிலும் அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள் என்பதற்குப் பல சம்பவங்களை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

ஒரு முறை பள்ளப்பட்டி நகரில் சிராஜ் பாய் (Deluxe Traders) அவர்களின் இல்லத் திருமணத்திற்குச் சென்றிருந்த போது ஒரு நிகழ்வினைக் கண்டேன். நிக்காஹ் முடிந்ததும், நிக்காஹ் வைபவங்கள் நடைபெற்ற பள்ளிவாயிலை வலம் வந்த பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் வெளியில் இஸ்லாமிய நூற்களை விற்றுக் கொண்டிருந்தவரிடம் அவருடைய வியாபாரம், வருமானம், குடும்பம் பற்றிய அனைத்து விவரங்களையும் சாதாரண மனிதரைப்போல் கேட்டு அறிந்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். இப்படி சென்ற இடமெல்லாம் தான் நேரில் சந்திக்கும் வறியவர்களின் துயர்துடைப்பார்கள். அச்சமயம் அவர்களிடம் எந்த ஆடம்பரத்தையும் நான் பார்க்க முடிந்ததில்லை. அவர்களின் ஆடம்பரமற்ற வாழ்க்கை எனக்கு வியப்பினை அளித்தது. மேலும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் சகோதரச் சமுதாயத்தவர்களிடமும், அரசு உயர் அதிகாரிகளிடமும் நல்ல தொடர்பினைக் கொணடிருந்தார்கள். குறிப்பாக I.A.S. மற்றும் I.P.S. அதிகாரிகள் பலர் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் அளப்பரிய அன்பினை கொண்டிருந்தார்கள். இத்தொடர்பு சமுதாய மக்களுக்கு நன்மை செய்ய அவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டது.

எனது தந்தை மறைந்த M.S.ஷேக் சம்சுதீன் மக்கி அவர்கள் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களைப் பற்றி கூறிய நல்ல தகவலை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1970ம் ஆண்டு எங்களது குடும்பத்தைச் சார்ந்த மாணவர் ஒருவரை கிரசண்ட் பள்ளியில் சேர்க்க பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களை அணுகிய போது என் தந்தையிடம் குடும்ப விவரங்களைக் கேட்டார்களாம். அதற்கு என் தந்தை அவர்கள் "சென்னை மண்ணடியிலுள்ள முத்துமாரி செட்டித் தெருவில் சிறிய அளவில் வீட்டு வாடகை வசூல் செய்யும் தொழிலும் (Rent Collecting Agent), Bharath Ghee Stores கரூரிலிருந்து நெய் வரவழைத்து விற்பனை செய்து வருவதாகவும் கூறியுள்ளார்கள்." என் தந்தையின் வாய்மொழிக் கேட்ட பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் "உங்களுக்கு தொழில் வாய்ப்பு தருகிறேன், எங்கள் பள்ளியிலுள்ள உணவகத்திற்கு நெய் சப்ளை செய்கிறீர்களா?" என வினவினார்கள். அதற்கு என் தந்தை சம்மதம் தெரிவித்து பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களுடன் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது இன்றுவரை தொடர்கிறது.

தன்னை நல்ல காரியங்களுக்காக நாடி வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது அள்ளிக் கொடுக்கும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் வித்தியாசமான தர்மசிந்தனை இருந்தது பாரட்டத்தக்கது. அதாவது தன்னிடம் நல்ல காரியங்களுக்காக நாடி வரும் ஊர் மக்களையும் அப்பணியில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் அந்தப் பணிக்கு தேவைப்படும் பணத்தில் அவர்களும் ஒரு பங்கு அளிக்க வேண்டும் என்று பணித்தார்கள். இப்படிச் செய்வதால் அப்பணியில் அவர்களின் அக்கறையும், ஆர்வமும், வளர்ச்சியும் ஒருங்கே அமையும் என்ற பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் உளமார்ந்த கருத்து உண்மை என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபிக்கப்பட்டது.

சமுதாயத்தின் மீது பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடமிருந்த அளப்பரிய அக்கறை அளவிட முடியாதது என்பதற்குப் பல சம்பவங்கள் என் நினைவில் நிழலாடுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் தினத்தந்தி நாளிதழில் வெளிவந்த ஒரு செய்தி!

"மதுரைக்கருகில் முஸ்லிம்கள் நிறைந்த ஒரு சிறு கிராமத்தின் மக்கள் அடிப்படை வாழ்வாதாரத்திற்கு வசதியற்று வாழுவதாக" செய்தி பிரசுரிக்கப்பட்டது.

அடிக்கடி பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் இல்லம் சென்று சந்திக்கும் பழக்கத்தை வழக்கமாக கொண்டிருந்த நான், அந்நேரத்தில் அவர்களை சந்திக்கச் சந்தர்ப்பம் கிட்டிய போது அவர்கள் தினத்தந்தி செய்தி பற்றி வினவினார்கள். நானும் படித்த செய்தியினை அவர்களிடம் பகிர்ந்தேன். அதற்கு அவர்கள் அச்செய்தி உண்மையா என அறிந்து வரும்படி என்னைப் பணித்தார்கள். உடனடியாக நான் அப்பகுதியில் அழைப்புபணி செய்யும் A.R.ஆஸாத் அவர்களை தொடர்பு கொண்டு, செய்தி உண்மை என தகவல் அறிந்து பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களிடம் தெரிவித்தேன். சிறிது நாட்களிலே பி.எஸ்.ஏவாப்பா அவர்களின் நான்காவது மகன், நண்பர் B.S.அஷ்ரப் புகாரி அவர்கள் என்னை தொடர்பு கொண்டு பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களும் துயருற்ற மக்களின் துயர்துடைக்க வேண்டிய பண உதவி செய்ய பணம் தந்துள்ளார்கள் என்றார்கள். அப்பணம் என் மூலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வாப்பா அவர்களின் கொடைத்தன்மையால் அம்மக்களின் வாழ்வியல் துயரங்கள் காலப்போக்கில் மறைந்து போயின.

எல்லாத் துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் ஒரு வியக்கத்தக்க சாதனையாளர் ஆவார்கள்.

அவர்கள் எந்தத் துறையென்றாலும் அத்துறையில் மேற்கொள்ளும் எல்லாச் செயல்பாடுகளும் அந்தந்த் துறையைச் சார்ந்த வல்லுனர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனை பெற்றதாகவே அமையும். அதே போன்றே தன்னிடம் நிரந்திரமாகப் பணி செய்பவர்களையும் பல துறை நிபுணத்துவம் பெற்றவர்களாகவே தேர்வு செய்திருந்தார்கள். பொதுமேலாளர் ஜலால், தனிச்செயலாளர் ஹஸன் போன்றவர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

"தாடி சதக்கத்துல்லாஹ்" என்ற அடைமொழியோடு என்னை அடையாளப்படுத்தியிருந்த பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் என் மீது அளப்பரும் அன்பும், பற்றும் கொண்டிருந்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியினை ஏற்படுத்தியது.

2004ம் ஆண்டு ஐக்கிய பொருளாதாரப் பேரவையின் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டம் இலங்கை தலைநகர் கொழும்புவில் உள்ள ஹோட்டல் கலதாரியில் நடைப்பெற்றது. குடும்பத்துடன் சென்றிருந்த நான் கூட்டம் முடிந்து இரு தினங்கள் கழித்துக் குடும்பத்துடன் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களை சந்திக்கச் சென்றேன். அப்போது அவர்கள் எனது மனைவி ஆசியா கதிஜாவிடம் "சதக்கத்துல்லாஹ் எனக்கு நல்ல பிள்ளை. உன்னிடம் நல்ல முறையில் நடந்து கொள்கிறானா?" என அவர்களுக்கே உரிய நகைச்சுவை உணர்வுடன் கேட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்!.

பிறரிடம் பழகும் தன்மையிலும், மற்றவர்களை மதிப்பதிலும் அனைவருக்கும் முன்னுதாரனமாக பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் திகழ்கிறார்கள்.

2005ம் ஆண்டு நவம்பர் 19ம் தேதி சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற அப்துர் ரஸாக் ஆடிட்டர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு விழாவிற்கு பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் சக்கர நாற்காலியில் வந்தார்கள். என்னை அவர்கள் பார்த்ததும் சாப்பிட அவர்களுடன் அமரும்படிச் சொன்னார்கள். சாப்பிட்டு முடிந்ததும் அவர்களைக் காரில் ஏற்றிவிட வாசல்வரை சென்றேன். "நீ எதில் வந்தாய்" என அவர்கள் என்னைக் கேட்டதும்

வாடகை ஆட்டோவில் வந்தேன் என்றேன். அதற்கு அவர்கள் நான் உன்னை உன் இல்லத்திற்குக் கொண்டு போய் விடுகிறேன் எனது காரில் ஏறு என்று வற்புறுத்தினார்கள். மிகச்சதாரணமானவனாகிய என்னை, வயதிலும், வசதியிலும் உயர்வான பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் இரவு 10 மணிக்குப் பிறகும் தனது காரில் கொண்டு போய் விடுகிறேன் என்று சொல்லியதை நினைத்து வியந்தேன். அந்த வியப்பிற்கு அளவே இல்லை.

கீழக்கரை A.G.A.ரிபாய் அவர்கள் என்னைவிட பல வயது மூத்தவர்கள். ஆயினும் நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். ஒரு முறை நாங்கள் இருவரும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களை சந்திக்கச் சென்றோம். அப்போது பொதுவான விசயங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது "ரிபாய் உன்னைவிட சதக்கத்துல்லாஹ்விற்குத் தான் முக்கியத்துவம் தருகிறேன் ஏன் தெரியுமா?. அவனுடைய தாடி என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது" எனக் கூறினார்கள். எனக்கு மெய்சிலிர்த்தது. மாஷா அல்லாஹ்!.

2006ல் புதுடெல்லியில் அமைந்திருக்கும் India Islamic Cultural Centre இல் ஆயுள் உறுப்பினராக பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களே என்னை முன்மொழிந்து கையெழுத்திட்டார்கள். மேற்குறிப்பிட்ட I.I.C.C.க்கு பெருமளவு பொருளுதவி செய்துள்ளார்கள். குறிப்பாக அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு அவர்கள் பெயரில் கேளரங்கம் (B.S.Abdur Rahman Auditorium) அமையப்பெற்றுள்ளது.

பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் பல பள்ளிவாசல்களுக்குப் பொருளுதவி செய்து இருந்தாலும், நான் பார்த்த மூன்று முக்கியமான பெரிய பள்ளிவாசல்கள் 1) சென்னை அண்ணாசாலையில் (Mount Road) அமைந்திருக்கும் மக்கா மஸ்ஜித், 2) கொடைக்கானலில் அமைந்திருக்கும் ஜும்மா மஸ்ஜித் 3) குற்றாலத்தில் அமைந்திருக்கும் ஜும்மா பள்ளிவாசல் ஆகும்.

மேலும் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் எங்களது ஊருக்கும் பல உதவிகள் செய்துள்ளார்கள். அதில் குறிப்பாக அவர்கள் நிறுவிய Emirates Trading Agency, Dubai குழுமத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த பலரும் பல உயர் பதவிகளில் உள்ளார்கள். மேலும் நான் அறங்காவலராக இருக்கும் K.M.T. மருத்துவமனைக்கு அவர்கள் நடத்தும் சீதக்காதி அறக்கட்டளை (Seethakathi Trust) சார்பாக நோயாளிகள் தங்கும் அறை கட்டப்பட்டு மக்கள் பயன் பெறுகிறார்கள். என்னுடைய பரிந்துரைப்படி எங்கள் ஊரைச் சேர்ந்த முழுமையாக பார்வை இழந்த (Fully Blind) மாணவி ஒருவருக்கு பிஎஸ்.ஏ.வாப்பா அவர்கள் நடத்தும் கீழக்கரை தாசீம் பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரியில் B.A., M.A., மற்றும் B.Ed. படிக்க கல்லூரிக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் முழுவதும் அவர்கள் நடத்தும் அறக்கட்டளை மூலம் செலுத்தி படிக்க வைத்தார்கள். கல்லூரியின் தாளாளர் ஹாலித் புகாரி (பிஎஸ்.ஏ.வாப்பா அவர்களின் சகோதரி மகன்) அவர்களும், கல்லூரியின் முதல்வர் சுமையா தாவூது அவர்களும் இம்மாணவியின் தொடர் கல்விக்கு பெரிதும் உதவினார்கள். ஜஸாகல்லாஹுஃ கைர்!. அம்மாணவியும் தன் பங்கிற்கு நன்றாக படித்து பல்கலைக்கழகம் தரம் (University Rank) பெற்று, தான் படித்த கல்லூரிக்கு பெருமை சேர்த்தார். தற்போது அப்பெண்மணி அரசுப் பள்ளியில் ஆசிரியராக பணிப்புரிந்து வருகிறார். பிஎஸ்.ஏ.வாப்பா அவர்கள் சமுதாய மக்களின் கல்விக்காக செய்துள்ள சேவைகளால் அவர்களை கல்வியின் தந்தை என்றழைப்பது மிகச் சிறப்பாக இருக்கும்.

மனித நேயத்திலும், தொண்டுள்ளத்திலும் சிறப்புற்று விளங்கிய பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் விருந்தோம்பல் குணம் மிகவும் பிரமிக்கத்தக்கது. அவர்களோடு உடனிருக்கும் காலம் என் வாழ்வினில் வசந்தகாலம்.



பி.எஸ்.ஏ.வாப்பா அவர்கள் மனித வாழ்வில் ஒரு முன்மாதிரி!. வாழும் தலை முறைகளுக்கு அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு. வரும் தலைமுறைகளுக்கு அவர்கள் ஒரு வழிகாட்டி. சாதனையில் அவர்கள் சிகரம் தொட்டவர். சரித்திரத்தில் அவர்கள் இடம் பெற்றவர்.

பி.எஸ்.ஏ.அப்துர்ரஹ்மான் பெயரில் பல்கலைக்கழகம் செயல்பட்டாலும் பி.எஸ்.ஏ.வாப்பா என்ற பல்கலைகழக்கத்திடம் பாடம் கற்க வேண்டியது ஏராளம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் பி.எஸ்.ஏ.வாப்பா அவர்களின் சேவைகளைப் பூரணமாக அங்கீகரித்து அவர்களின் சந்ததிகளையும் அவர்களைப் போன்றே சேவை அர்ப்பணிப்பு மிக்கவர்களாக பல்லாண்டு காலம் மிளிரச் செய்ய வேண்டும் என்பதே நம் அவாவும் துவாவும் ஆகும்!.

***